EHJ-3-TA

# வரலாற்று நாயகர் இயேசு நாம் விசுவாசிக்கும் இயேசு தானா? நிகழ்ச்சி 3

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை குறித்ததான செய்திதான் பெரும்பாலும் பரவலாக பேசப்பட்டு வருகிற செய்தியாக இருக்கிறது பல தேசிய பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்துவருகிறது, குறிப்பாக டைம், நியூஸ்வீக்,மற்றும் US நியூஸ் மற்றும் வேல்ட் ரிபோர்ட். மேலும், இயேசு செமினாரின் அறிக்கைகளுக்கு ஊடகங்கள் அளவிற்கு அதிகமான இடமளித்து பெரிது படுத்துகிறார்கள் என நினைக்கிறன், தனிச்சையாக தேர்வு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் வல்லுனர்கள் சிலரை கொண்டிருக்கும் சிறிய கூட்டமாக இருக்கிறது.

இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை பற்றிய விவாதங்களில் எழும்பும் கேள்விகளை குறித்து பார்க்க இருக்கிறோம் பொதுவாகவும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலும் இயேசுவை குறித்த பலதரப்பட்ட வரலாற்று உண்மைகள் சரித்திரத்தில் சொல்லப்படும் இயேசுதான் கிறிஸ்த விசுவாசத்தின் இயேசு என்பதை நிருபிக்கும்விதமாக இருந்து வருகிறது.

எனது விருந்தினர் உலக தரம்வாய்ந்த சித்தாந்த வாதியான Dr. ஹேபர்மாஸ், புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், வரலாற்று இயேசு. அவர் தமது Ph. D. யை மிக்கிகன் மாநில பல்கலைகழகத்தில் பெற்றார், இரண்டாவது டாக்டர் பட்டத்தை ஆக்ஸ்போர்டிலுள்ள இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், இங்கிலார்ந்து. Dr. ஹேபர்மாஸ் லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தம் மற்றும் இறையியல் பாடபிரிவின் சேர்மேனாக இருக்கிறார் இவர் இயேசுவின் வாழ்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார் அவை சில பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த புதிய ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இணைந்திட அழைக்கிறோம் ஏன் இயேசு ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களில் அதிக வரலாற்று ஆதாரங்களை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். இன்றைக்கு மில்லியன் டாலர் கேள்வி நம்முன் இருக்கிறது. இயேசு தம்மை தேவனாக பார்க்கவில்லை என்று நீங்கள் நினைகிறீர்களா?

சில வல்லுனர்கள் இயேசு செமினரியில் இருப்பவர்கள் இயேசு தம்மை தேவனென்று சொல்லவில்லை என்கின்றனர். மேலும், பிற்கால கிறிஸ்தவ மக்கள் சில புத்தகங்களை நிராகரித்ததாக கூறுகின்றனர், மற்ற சுவிசேஷங்கள், புதிய ஏற்பாட்டு கேனனை தவிர இயேசுவை பலவிதங்களில் வெளிபடுத்திய புத்தகங்களை நிராகரித்தனர். இந்த நிகழ்ச்சியில் நீங்கள் கேட்க இருப்பது, இயேசு செமினறி யினரின் தவறாக இரண்டு குறிப்புகள் பற்றியவை.

இப்போதும் இயேசு தேவன் என்று சொல்லப்பட்டார் என்பதை பார்க்கலாம். இயேசு செமினரியின் சொந்த கூற்றை கருத்தை ஒரு ஆதாரமாக வைத்துகொண்டு கிறிஸ்தவர்கள் இயேசு தம்மை தேவன் என்று சொன்னார் என்பதை நிரூபிக்க முடியுமா? அதற்கான பதில், “முடியும்”. Dr. கேரி ஹேபர்மாஸ், இன்றைய நமது விருந்தினர், சித்தாந்த மேதையும் வரலாற்றாலருமனவர், கிறிஸ்துவின் வாழ்கையை பற்றி வல்லுனர்களின் பதிவுகளில் நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி இருக்கிறார். ஒரு கிறிஸ்தவராக, புதிய ஏற்பாட்டில் இருக்கிற அனைத்தும் சத்தியமும் அதிகாரப்பூர்வமான வார்த்தைகள் என்று ஒப்புகொள்கிற அளவிற்கு பல காரணங்களை இவர் கண்டறிந்து இருக்கிறார். ஆனால் இதை விதத்தில் கிறிஸ்தவரல்லாத விமர்சகர்கள் ஏற்றுகொள்ள மாட்டார்கள் என்பதையும் அறிந்திருக்கிறார். ஆகவே அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதமான வரலாற்று ரீதியாக உண்மையானது என்று நம்பும்விதமான ஆதாரனகளை புதிய ஏற்பாட்டில் இருந்து திரட்டி எடுத்துரைக்க துவங்கியிருக்கிறார் – அந்த உபகரணங்களை பயன்படுத்தி இயேசு தம்மை தேவன் என்று சொல்லியிருக்கிறார் என்பதை நிருபிக்கிறார். இப்போதும், Dr. ஹேபர்மாசின் விவாதம் என்னவென்றால் எந்த ஆதாரமாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டு விமர்சகர்கள் என்ன சூழ்ச்சி செய்தாலும் சரி, எல்லாவற்றிலும் நீங்கள் இயேசுவின் நிலை என்ன என்பதையும் தம்மை மனுஷகுமாரன் என்று சொன்னதையும், நீங்கள் நினைவுகூர்ந்து, அவருடைய தெய்வத்துவத்திற்கு ஆதாரமான தானியேல் 7:13-14ஐ பார்ப்பீர்கள். ஆகவே Dr. ஹேபர்மாஸ் இயேசு தம்மை தேவன் என்று சொன்னார் என்பதை விமர்சகர்களின் கூற்றை வைத்து விவாதிப்பதை கவனியுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சென்ற வார நிகழ்சியை முடிவு செய்யும்போது நாம் வெளிப்படையாக காணப்படுகிற சில காரியங்களை பற்றி சொல்லி முடித்தோம், நினைவிருக்கிறதா, நாம நேரடியாக ஒரு விஷயத்தை பார்த்தோம். அது என்னன்னு பார்த்தேங்கன்னா: “புதிய ஏற்பாட்டின் சிவப்பு எழுத்துக்கள் எல்லாம் இயேசு சொன்னது என்று நீங்களாகவே எடுத்துகொள்ள கூடாது. இயேசு சொன்னதாக மாற்கு சொல்வதை அவர்தான் சொன்னார் என்று எப்படி தெரியும், லூக்கா சொல்றது அவர் சொன்னதைதானா, யோவான் சொன்னது அவர் சொன்னதா, மத்தேயு சொன்னது அவர் சொன்னதுதானா?

இப்ப, போன நிகழ்ச்சியில் நான் இரண்டா காரியத்தை சொன்னேன் இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்றும் மனுஷ குமாரன் என்றும் கூறியிருந்தார். இந்த விதத்தை குறித்து ஒருசில விஷயங்களை நாம் பார்க்க இருக்கிறோம், இதை இன்னும் எளிமையான விதமாக பார்க்க இருக்கிறோம், இது ஆதிகால இலக்கிய புத்தகமே அல்லாமல் வேறு ஒன்றுமே இல்லை. சரி, புதிய ஏற்பாடு ஒரு பண்டைய கால இலக்கியம். விமர்சகர்கள்

போல நாமும் இதையே எடுத்துகொள்வோம் இருந்தாலும் இப்ப பிரச்சனையையும் நாம பார்க்கணுமே, “இயேசு தம்மை மனுஷ குமாரன் என்று சொன்னாரா?”

இப்ப, ஒரு காரியத்தை முதலாவது ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று சொல்லும்போது, இந்த மாதிரி ஏதாவது நடக்கும். பொதுவா திங்கட்கிழமை காலையில் எல்லாரும் ஒன்று கூடும்போது, நேற்றைக்கு நடந்த கால்பந்து விளையாட்டை பற்றி தங்கள் கண்ணோட்டத்தை பதிவு செய்திட முயலுவார்கள். “அதாவது, நீ இப்படி செய்திருக்கணும் அவன் அப்படி விளையாடியிருக்கணும்.” இதுல ஏற்கனவே, சொல்லப்படுகிற விஷயம் இருக்கு அதாவது புல்ட்மேன் கூட சேர்ந்து சுவிசேஷங்களை எழுதியவர்கள் இயேசுவின் வார்த்தைகளை உருவாக்கினார்கள் என்கின்றனர். இதெல்லாம் இயேசுவின் போதனையை பத்தி திங்கட்கிழமை பேசுகிற விமர்சகர்களை போன்றது. மனுஷ குமாரன் என்பது ஏதோ கூட்டி சொல்லப்பட்ட விஷயம் அல்லவென்று நமக்கு எப்படி தெரியும்?

சரி, விமர்சகர்களாலே சிலர் எல்லைகோடுகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது அது முக்கியமானவை, அதில் இரண்டுமே மனுஷ குமாரன் என்று கூற்று நிறைவடைந்திருப்பது வெளிபடுகிறது. இதெல்லாம் தத்ரூபமான உண்மைகள். சரி, முதலாவது பலஇடங்களில் இப்படி சொல்லப்பட்டு இருப்பது. ஒரு இடத்திற்கும் மேற்பட்ட இடங்களில் சொல்லப்படும்போது, அது உண்மைதான் என்பதற்கு சில ஆதாரங்கள் கிடைக்கப்படுகிறது. அதாவது, இயேசு செமினரி மக்களே இந்த கருத்தை முதலில் இருந்து பார்த்து வருகிறார்கள், ஐந்து சுவிசேஷங்கள் என்கின்றனர்.

இப்ப, இயேசு மனுஷ குமாரன் என்ற போதனை. இது அவர் தம்மை பற்றி சொன்ன காரியம், சுவிசேஷங்களின் அடிப்படையிலும், பாரம்பரிய சுவிசேஷங்கள் என்று அழைக்கப்படும் ஐந்திலும் இவை இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இந்த பாரம்பரிய சுவிசேஷங்கள் என்று சொல்லப்படுவது மாற்கு “M” – மத்தேயு சொன்ன சில விஷ்யங்களை வேறு யாரும் சொல்லவில்லை; L – லூக்கா சொன்ன சில விஷயங்களை வேறு யாரும் சொல்லவில்லை; யோவான், என்று இந்த மாதரியான சொல்லப்படத் ஆவணங்களை அவர்கள் Q என்று அழைக்கிறார்கள். ஐந்து பதிவுகள். இன்னொன்னு தெரியுமா. மனுஷகுமாரன் என்று எல்லாவற்றிலும் இருக்கிறது. அதனால, இது இயேசு தம்மை பற்றி கூறிய வார்த்தைகள் தான் என்று தெளிவாக புரிகிறது.

இதுல இன்னொரு விஷயம் இருக்கு, “இதை பார்க்கும்போது இது பிரபலமான பெயர் என்று புரிகிறது. சபையானது இதை உருவாக்கி சொல்லவில்லை என்று எப்படி தெரியும்? ஏற்கனவே, மனுஷ குமாரன் என்பதற்கு அர்த்தம் இருக்கிறது, சுவிசேஷங்களில் இயேசுவை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பிரத்தியேக பெயர் அது, அப்படியா? இடை அவன் கிபி 30ல இயேசுவின் வார்த்தைகளாக சேர்த்துகொண்டார்கள். இல்ல உண்மையில் என்ன ஆச்சுன்னா, சுவிசஷங்கள் எழுதப்பட்ட போது இது பிரசித்திபெற்ற பெயராக இருந்தது.” இது இரண்டாவது காரியம். இதை ஒன்று போல இல்லாத நிலை என்று விவரிக்கும் ஆட்கள் உண்டு: இயேசு யூதர்களிடம் இருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளவில்லை, இயேசுவின் போதனைகள் ஆதி திருச்சபையில் இடம் பெறவில்லை, இருந்தாலும் இது தத்ரூபமாக இருக்கிறது என்றால். இது ஒன்று போல சிறப்பாக இல்லை என்றும் சொல்வார்கள். உங்களுக்கு தெரியுமா. மனுஷ குமாரன்

என்பவர் யூதர்களின் பாதத்தடியில் இருக்க முடியாது. மனுஷ குமாரன் என்று பாரம்பரியம் அவர்களுக்கு இருந்தது இருந்தாலும் இயேசுவுக்கு அதை பொறுத்த அவர்களுக்கு மனதில்லை.

சபையயின் நிலைமை என்ன? இது திங்கட்கிழமை விவாதத்திற்கு ஏற்ற உதாரமாக இருக்கிறது அல்லவா? அவர்கள் இயேசுவின் வாயால் சொல்லப்பட்ட வார்த்தைகளை வாசித்து பார்க்கிறார்கள், சுவிசேஷங்கள் எழுதப்பட்ட போது இயேசுவிற்கு சொல்லப்பட்ட பெயர் இதுதான். இன்னொன்றும் இருக்கிறது. அதாவது புதிய ஏற்பாட்டின் நிருபங்களில் எங்கயும் இயேசுவை மனுஷ குமாரன் என்று சொல்லாததால் இது ஒத்துவராமல் இருந்தது. உண்மையில், சுவிசெஷங்களுக்கு வெளியில் ஒரே ஒரு இடத்தை தவிர வேறு எங்கயும் அவரை மனுஷகுமாரன் என்று சொல்லப்படவில்லை, வானத்தில் உயர்த்தப்பட்ட மனுஷ குமாரன் என்று அந்த இடத்தில் சொல்லப்படுகிறது. பூலோக மனுஷ குமாரன், பூலோகத்தில் இருந்த இயேசு, இவர் சுவிசெஷங்கலுக்கு வெளியில் எங்கயும் மனுஷ குமாரன் என்று சொல்லப்படவில்லை இயேசு தமது உதடுகளால் சொன்னார், இன்னொரு இடத்தில் ஒரு மனிதன் தானாக இப்படி சொல்லிகொண்டார் இந்த பெயரை தந்தார், அதாவது, “நீர் உம்மை மனுஷ குமாரன் என்று சொல்லுகிறீர்…” இயேசுவை குறிக்கிறது. இது இயேசுவால் தம்மை குறித்து சொல்லப்பட்ட வார்த்தை. வேறு விதமாக சொன்னால் – இதை இன்னும் தெளிவாக சொல்கிறேன் – இயேசுவின் வார்த்தைகளை குறித்து விவாதிக்கப்படும் திங்கட்கிழமை விவாதத்தை போல இருக்கலாம் ஏன்னா இதுதா சபையின் பிரபலமான கூற்றாக இருந்திருக்கும், ஆனால் சபைகளில் அப்படி காணப்படவில்லை.

அப்ப இயல்பான தீர்வு என்னவென்றால், முதலாவதாக, எல்லா ஐந்து நிலைகளிலும், இது இயேசுவை குறித்துதான் சொல்கிறது. இரண்டாவதாக, இது யூதர்களை குறிப்பது கிடையாது. இது சபை நாட்களில் சொல்லப்பட்ட ஒன்றல்ல. உங்களுக்கு தெரியுமா? இயேசு உண்மையாகவே தம்மை மனுஷ குமாரன் என்று சொல்லியிருப்பார், இங்கு ஒரு விஷயம் இருக்கு ஏன்னா மனுஷகுமாரன் என்று தானியேல் 7:13- பதினாலில் இருப்பது விசேஷமான ஒருவர், அதை முன்பே சொல்லியிருக்கிறோம். அவர் அனாதியாய் என்றும் இருக்கிறவர். அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், தேவ ராஜ்யத்தில் இருந்து பூமிக்கு இறங்கிவரும் தெய்வீகமானவர். இயேசு தம்மை அவர்தான் என்று சொல்ல, கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை நீங்கள் விசுவாசிக்காமல் இருந்தால், நீங்க ஆதாரங்களின் சிகரத்திற்கு எதிராக போய்கொண்டு இருக்கிறீர்கள் என்று அர்த்தமாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்போது ஒரு கேள்வி எழுகிறது. இயேசு தாமே முன்வந்து எங்காவது தன்னை தேவ குமாரன் என்று சொல்லியிருக்கிறாரா? அதற்கான ஆதாரங்கள் என்ன? மீண்டும், Dr. ஹேபர்மாஸ் விமர்சகர்களின் சுய எண்ணங்களை எடுத்து,ஐந்து வித்தியாசமான உபகரணங்கள் மற்றும் வரலாறு தகவல்களை முன்வைத்து இயேசுவை பற்றிய ஆதாரங்களை எடுத்து சொல்ல இருக்கிறார், மலும் இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று சொன்னதை அவர்களுக்கு வெளிபடுத்தி காண்பிக்க இருக்கிறார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இப்ப, இரண்டாவது தலைப்பு – நீங்கள் சொன்னமாதிரி, தெய்வத்துவம் என்று சொல்லும்போது இது வெளிப்படையாக இருக்கிறது – தேவ குமாரன். இயேசு தம்மை தேவ குமாரன் என்று சொன்னாரா? இயேசு தம்மை தேவ குமாரன் என்று சொல்லிய சில வசனங்களை உங்களுக்கு முன்பாக எடுத்து சொல்ல விரும்புகிறேன் அதனால இது ஆதி கிறிஸ்தவர்களின் சமூகத்திற்குள் சொல்லப்பட வார்த்தைகள் என்று விவாதிப்பதற்கு எந்த வழியும் இடமும் இல்லை.

சரி. முதலாவதாக, மத்தேயு 11:27- இதையே லூக்காவிலும் பார்க்கிறோம் – விமர்சகர்கள் Q என்று சொல்கிற ஆதிகால சொற்பொழிவின் ஆவணங்களாக இவை கருதப்பட்டு வருகிறது அதை பார்க்கலாம். ரொம்ப ரொம்ப பழமையானது. இது சுவிசேஷங்களுக்கும் முந்தின நாட்களில் இருந்தாக நம்புகிறார்கள். இருந்தாலும் மத்தேயு 11:27 இயேசு சொன்னதற்கு ஒப்பாகவே இருக்கிறது... அவர் சொல்கிறார், “நான் என் பிதாவை வெளிபடுத்தும்படி வந்தான்.” அவர் சொன்ன விதம் எப்படி இருக்கு தெரியுமா. அதாவது, பிதாவை தவிர குமாரனை ஒருவனும் அறியான், குமாரனை தவிற பிதாவை ஒருவனும் அறியான் அவர் யார்க்கும் தம்மை வெளிபடுத்த சித்தமாக இருக்கிறாரோ அவன் அறிவான்.” இப்ப, இந்த இடத்தில் இயேசு தேவனுடைய தனித்துவமான ஞானத்தை பற்றி சொல்கிறார், இதெல்லாம் ஆதியில் இருந்த பதிவுகளில் சொல்லப்பட்டு இருக்கிறது, ஆனால் விமர்சகர்கள் இதை நிர்ணயிக்கும் விதங்கள், மிக கடினமானதாக தொன்றுகிறது.

மற்றொரு பகுதி மாற்கு பதினாலு: முப்பத்தி ஆறு இங்கு இயேசு தேவனை பிதா என்று அழைக்கிறார். இதை பற்றி நிறைய எழுதபட்டு இருக்கிறது, அதில் ஜெர்மானிய புதிய ஏற்பாட்டு நிபுணர்களான யோயாக்கீம் ஜெரேமியாஸ் மற்றும் ஜெரிமியாஸ் அப்பா என்பது விசேஷமான பெயர் என்று கூறுகின்றனர். பொதுவாக யூத கலாசாரத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுவதை பார்க்க முடியாது. இது அப்பா என்று மொழியாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது அதாவது ரொம்ப உரிமையோடு தகப்பனே அப்பா என்று சொல்லப்படுகிற வார்த்தையாகும். ஆனா இது அராமியத்தில் இருக்கிறது இதுதான் இயேசுவின் சொந்த மொழியாக கூட இருக்கலாம். நினைவிருக்கட்டும், புதிய ஏற்பாடு கிரேக்கத்தில் எழுதப்பட்டது. இயேசு ஒருவேளை அராமியத்தில் பேசியிருக்கலாம். அப்பா என்பது அராமியத்தில் இருந்தால், இது இயேசுவின் வார்த்தைகள் என்பதற்கு ஆதாரம் கிடைத்துவிட்டது என்று சிலர் யோசிக்க வாய்ப்பிருக்கிறது, ஆனால் இந்த வார்த்தையின் அர்த்தம் என்ன? தேவன் தம்முடைய தகப்பனாக இருப்பதை சொல்லுகிறார்.

இதுமாதிரி ஒரு வார்த்தை Q லயும் இருக்கு, இங்க அப்பான்னு இருக்கு. இது எல்லாத்தையும் விட உறுதியான ஒரு கூற்று மத்தேயு 13:32 தான். சரி, இதை பார்க்கும்போது ஒரு விஷயத்தை நினைக்க முடியும், “அட! இது என்ன?” இது கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை பற்றி சொல்கிறதே ஏன்னா இயேசு சொல்கிறார், “என் வருகை சமீபமாக இருக்கிறது”. அதாவது, “அந்த நேரத்தை, ஒருவனும் அறியான், தூதர்களுக்கு அது தெரியாது, குமாரனுக்கும் தெரியாது பிதா ஒருவரே அறிவார் என்கிறார்.” இயேசு பிதாவின் குமாரன் அல்லது தேவனுடைய குமாரன் என்று சொல்ல இது அசைக்கமுடியாத காரணமாக இருக்கிறது என்று சொல்வதற்கு காரணம் அவர் எப்ப வருவாருன்னு அவருக்கே தெரியாது. என்னுடைய கருத்து இதுதான். சபைதான் இந்த

விஷயத்தை சொன்னது இயேசுவின் வார்த்தையாக மாற்றிவிட்டது என்று சொன்னால், அப்படி எதுக்கு சொல்லணும், ஒரு இறையியலாளர் சொன்னார், “இறையியலுக்கே கூச்சத்தை உண்டாக்குகிறது.”இயேசுவை மனுஷ குமாரன் என்று சொல்ல நினைக்கிறாங்களா, சொல்லீட்டு போகட்டும், தேவ குமாரன்னு சொல்லணும், சொல்லீட்டு போகட்டுமே: இய்சு பிரதியுத்திரமாக அவர்களிடம், “இதோ, நான் தேவ குமாரன் என்றார். இல்லையே! அவங்க என்ன சொல்லணும் தெரியுமா, நான் வரும் நாழிகையை நான் அறியேன் என்று சொன்னதை சொல்லணும்.”

அது ரொம்ப கஷ்டம். ஏன்னா அவர் தேவனுடைய குமாரனா இருந்தால், ஏன் தாம் வருகிற வேளையை அவர் தெரியாது என்கிறார்? சரி, இதை கலாசார ரீதியாக விளக்கமளிக்க விரும்புகிறேன் ஏன்ன இயேசுவுக்கு மனித சுபாவமும் இருந்தது/ இயேசுவுக்கு தெய்வீக  சுபாவமும் இருந்தது.  அப்படி இருந்த நிலையிலும், இதை ஏதோ அவங்களே தானாக சொன்ன ஒரு வார்த்தையை போல இருக்க வாய்ப்பில்லை ஏன்னா இது வித்தியாசமாக இருக்கிறது. அவர் தம்மை தேவ குமாரன் என்று சொன்னாருன்னு வைத்துகொள்வோம்.அப்ப, அவங்க என்ன சொல்வாங்க, எப்படி குமாரனுக்கு தன்னுடைய வருகையின் நேரம் தெரியாம இருக்கும்?”இது இக்கட்டான ஒன்றாக நிற்கும். இயேசுவே இதை சொல்லியிருக்கிறார்.

இங்க நம்மிடம் Q பதிவுதான் இருக்குது: அடுத்து அப்பான்னு சொன்ன  பதிவு; என்னுடைய வருகையின் வேளை எனக்கு தெரியாது என்ற வார்த்தைகள். இந்த ஆதாரங்களை பார்க்கும்போது இயேசு தம்மை தேவ குமாரன் என்று சொன்னார் என்பது புரிகிறது, அதைதான் சுவிசேஷமும் சொல்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, மீண்டுமாக, வல்லுனர்கள் தங்கள் கருத்துப்படி சொல்லுகிற விஷயத்தை பற்றி பார்க்க இருக்கிறோம், இயேசு தம்மை தேவன் என்று சொன்னதின் அர்த்தம். இதனால் அவர்களுடைய கருத்தை நாம் ஏற்றுகொள்கிறோம் என்று சொல்லமுடியாது. வரலாற்று ஆதாரங்கள் மிக வலுவாக இருக்கிறது என்று சொல்லுகிறோம், கிறிஸ்தவர் அல்லாதவர் இந்த உண்மைகளை ஆராய்ந்து கிறிஸ்துவை ஏற்றுகொள்ள முடியும். Dr. ஹேபர்மாஸ் அவற்றை சுருக்கமாக கூறியிருக்கிறார். கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இங்க நாம கொஞ்சம் நிதானமா பேசனும் நான் இங்கு பயன்படுத்தும் குறிப்பான விதத்தை பற்றி இறையியல் விளக்கத்தை பற்றி கொஞ்சம் சொல்லணும். என்னுடைய கருத்து இத்துதான். சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் இயேசு கிறிஸ்துவை குறித்த பாரம்பரிய கண்ணோட்டத்தின்படி, சிவப்பு எழுத்து பதிப்புகள்: அப்போஸ்தலர், பவுலின் நிருபங்கள், இதெல்லாம் இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கு எதிராக எதையுமே சொல்லப்போறது கிடையாது, நம் பாவங்களுக்காக சிலுவையில் அறியப்பட்டார், மரணத்தில் இருந்து உயிரோடு எழுந்தார்.

நா வித்தியாசமான அணுகுமுறையை கொண்டிருக்கிறேன், அதை குறைந்தபட்ச உன்மைகள் என்று சொல்கிறேன், அல்லது குறைந்த பட்ச ஆதார குறிப்பு என்றும் சொல்லிடுவேன்” அது என்னன்னா, என்ன சொல்கிறேன் என்றால், விமர்சகர்கள்

தங்களுடைய விதங்கள் சரியானது என்று தர்க்கம் செய்தாலும் சிலர், பாரம்பரிய சுவிசேஷங்களில் ஐந்து அடுக்கு பாரம்பரியம் இருக்கிறது என்றாலும், அதில் Q நிலைகள் அதாவது ஜெர்மானிய உபகரணங்களில் இருந்து எடுக்கப்பட்ட "சொல்லப்பட்ட ஆவணங்களின்" தொகுப்பாக இருந்தாலும் சரி. ஒன்று மட்டும் உண்மை ஆதிகால திருச்சபைகளில் சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாம் இயேசுவின் வார்த்தைகள் என்பதை விமர்சகர்கள் நம்புகிறார்கள் – இதை ஜாக்கிரதையாக எடுத்துகொள்கிறார்கள் – இந்த ஆவங்களில் ஒன்றுதான் மத்தேயு 11:27 இயேசு தம்மை தேவ குமாரன் என்று சொல்லுகிறார்.

பதிவுகளை பற்றி நாம் பேசினோம். சுவிசேஷகர்கள் அப்படி யோசிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்றால், "இத, கவனிங்க. இது முழுவதும் வசனங்கள் தான். அதை ஏன் தனித்தனியாக பிச்சு எடுக்கணும்?" என்கின்றனர்.

ஆனால் விமர்சகர்கள் புதிய ஏற்பாட்டை ஒரு ஆதிகால பண்டைய இலக்கியமாக பார்க்கிறார்கள் அதுக்கு மேல ஒண்ணுமில்லை, இவங்க இதை கவனமாக கையாளுகிறார்கள் – அவர் சொல்றதுதான் சரி – இது முன்பு இருந்தவை என்று சொல்லப்படுகிற விதமான அறிக்கைகள் இருக்கும்போது இது சாத்தியமாக இருக்கும் என்று நினைக்கிறன், அதாவது, பவுல் சொல்றாரு, "நான் பெற்றுகொன்டத்தை உங்களுக்கு ஒப்புவிக்கிறேன்" மேலும் பவுல், "முதியவர்களின் பாரம்பரியத்தை கைகொள்ளுங்கள் என்கிறார் – இந்த புத்தகங்கள் எல்லாம் இது முன்பே இருந்த ஒன்று என்பதை அறிக்கை செய்யும் சிறு அடையாளங்களாக இருக்கிறது, முக்கியமானது இதுதான், இதெல்லாம் துவக்கம் முதல் இருக்கிறது. இதெல்லாம் அப்போஸ்தலர்களுடையது என்று சொல்லுகிறன். விமர்சகர்கள் இப்படியாக யோசிக்கிறார் என்று சொன்னால் குறைந்த பட்சம் இதையெல்லாம் முன்வைக்க முடியுமே – சில பதிவுகள் இருக்கு, Q ஸ்டேட்மெண்ட், சில உபகரணங்கள் இருக்கு, சுவிச்ஷம் இருக்குது – என்னுடைய கருத்து இதுதான், அவர்களுடைய விதத்தை பயன்படுத்தினாலும், நிச்சயமாக அதிலிருந்து ஒரு தீர்வை பெற முடியும் இயேசுவின் தெய்வத்தும், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் எல்லாம் அடங்கியிருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இன்றைக்கு ஜீசஸ் செமினார் மக்களால் சொல்லப்படுகிற முக்கியமான காரியம் ஒன்று இப்போது புதிய ஏற்பாட்டு தொகுப்பில் இருக்கிற 27 புத்தகங்கள் அனைத்தும் சில அரசியல் சூல்சிகளால் உண்டானது, அவை கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் இதில் இணைக்கப்படவில்லை என்று கூறுகின்றனர். ஜீசஸ் செமினறி மக்கள் பிற்கால கிறிஸ்தவர்கள் வேண்டுமென்றே இயேசுவை குறித்து மத்தேயு மாற்கு லூக்கா யோவானில் சொல்லப்பட்ட காரியங்களுக்கு மேலாக சொல்லப்பட்டிருக்கும் மற்ற சுவிசேஷங்கள் மற்றும் புத்தகங்களை நிராகரித்ததாக கூறுகின்றனர். வேண்டுமென்றே கேனனில் இருந்து நிராகரிக்கப்பட்ட புத்தகங்களில் ஒன்றாக தோமா சுவிசேஷத்தை கூறுகின்றனர். ஆனால் Dr. ஹேபர்மாஸ் அது உண்மை அல்ல என்று கூறுகிறார் – தோமாவின் சுவிசேஷமானது கிபி 150 களுக்கு முன்பு தொகுக்கப்படவில்லை என்று கூறுகிறார், புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் அனைத்தும் கி

பி 90 முன்பு எழுதபட்டவைகலாம். அதனால் தோமாவின் புத்தகம் கேனனில் இடம்பெறவில்லை என்று கூறுகிறார். கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** அதாவது, ஜான், என்னை அமைதிபடுத்தும் கேள்விகளில் இதுவும் ஒரு கேள்வியாக இருக்கிறது. இப்ப, சுவிசேஷங்கள் இருக்குது; அதோடு அப்போஸ்தலர் நடபடிகளில் சில வார்த்தைகள் இருக்குது. பவுலும் பேசியிருக்கிறார். விமர்சகர்கள் பவுல் சொன்னதை முன்வைக்க நினைக்கிறார்கள், அதுல கிட்டத்தட்ட சுமார் ஐந்து, ஆறு எட்டு நிருபங்கள் நம்பத்தகுந்த நிருபங்களாக கருதப்பட்டு வருகிறது. அப்போஸ்தலர் மற்றும் சுவிசேஷங்களில் இருக்கிற தெய்வீகமான வார்த்தைகளுக்காக சில நேரங்களில் விவாதிக்க வேண்டி இருக்கிறது. ஆனால் இதுதான் பாரம்பரிய கேனனாக இருக்க்ரியது. விமர்சகர்கள் மற்ற கண்ணோட்டத்தில் உங்களை சிக்கவைக்க நினைக்கிறார்கள். இப்ப, நடுநிலையாக இருக்கும் மேதைகளை பற்றி நான் சொல்லவில்லை, ஆனா இயேசு செமினரியில் இருக்கிற மக்களை போன்றவர்கள். சில அரசியல் நோக்கத்தோடுதான் கேனனில் இருந்து சில புதககங்களை நாம் தெரிந்தே விளக்கியிருக்கிறோம் என்று சொல்லவேண்டும் என்று விரும்புகிறார்கள். இன்னும் சில காரணிகள் இருக்கிறது இருந்தாலும், ஒரே ஒரு இயேசுதான் என்பதை நாங்கள் மாற்ற விரும்பவில்லை அதனால் கேனனில் என்ன இருக்கணும் இல்லாதது ஏன் இல்லை என்று காரணங்களை கொண்டிருக்கிறோம் – இதுல சிறந்த உதாரணம் என்றால் தோமாவின் சுவிசெஷம்தான் – இது வாய்மொழி ஆவணம் ஆனால் இஎசுயன் வார்த்தைகள் என்று நூற்றுகணக்கான வார்த்தைகள் இருக்கிறது, அதெல்லாம் Q அறிக்கை போன்றது. அதைதான் அவர்கள் சொல்கிறார்கள்.

சரி, ஏன் சிலவற்றை தள்ளி வைக்கிறோம் – இங்க தோமாவின் சுவிசேஷத்தை உதாரணமாக பார்க்கலாம் – அதை ஏன் கேனனில் இருந்து விளக்கி வைத்திருக்கிறோம்? இங்கு ஒரு சில விஷயங்களை பகிர்ந்துகொள்ள விரும்புகிறன். முதலாவதாக, நீங்க மற்ற புத்தகங்களை வைத்து என்ன செய்தாலும் சரி ஆனா அதிலுள்ளவைகள் இவற்றின் ஆதாரத்தோடு போருந்தியிருக்கவேண்டும். A. பவுல்; B. அப்போஸ்தலர்கள்; C. சுவிசேஷங்கள். வேறு எந்த புத்தகமாக இருந்தாலும் சரி, இவற்றோடு ஒத்திருப்பதாக இருக்கவேண்டும். சொல்லபோனா, பவுல் ஆதிகால அப்போஸ்தலர், பேதுரு ஆதிகால அப்போஸ்தலர்; யாக்கோபு, இயேசுவின் சகோதரர் ஆதிகால அப்போஸ்தலர்; தோமா – இதை சொல்லப்பட்ட புத்தகமாக கருதபட்டாலும் யாருமே இதை அப்போஸ்தலர் தோமா எழுதினார் என்பதை நம்பவில்லை. இது கேனனில் சேர்க்கபடாம்ல் இருபதற்கு இதுவும் ஒரு காரணம். இது அதிகாரத்திற்கு மேலானது. அதிகாரத்திற்கு மேலானதுஎன்றால் என்ன? இது இயேசுவோடு இருந்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களால் எழுதப்பட்ட ஒன்று போல் இல்லை.

இப்ப, இன்னொரு கருத்தும் இருக்கிறது, "சில அரசியல் சூழ்சிகள் இருந்ததால் சில புத்தகங்கள் சேர்க்கபடவில்லை , அதில் தோமாவும் ஒன்று என்று சொல்கிறார்களே? உங்களுக்கு ஒரு விஷயத்தை சொல்கிறேன். எந்தவித அரசியல் ஊடுருவலும் கிடையாது ஏன்னா தோமா போன்ற புத்தகங்கள் அங்க இருந்திருந்தால் தானே அதை கேனனில்

இருந்து விளக்கி இருக்க முடியும். அப்போதும் தீர்மானிக்கவே இல்லை, "மாற்கு, இருக்கட்டும்; தோமாவின் சுவிசேஷம் வேண்டாம் என்று சொல்லல, மேலும் அந்த நாட்களில் தோமாவின் சுவிசேஷம் எழுதப்படவும் இல்லை.

இயேசு செமினார் தோமா கி பி 50ல திரும்பி வந்தார் என்று சொல்வதற்கு குறைந்த ஆதாரங்களே இருக்கிறது. உங்களுக்கு ஒன்று தெரியுமா? தோமா கிபி 90களில் வந்தது என்று அவர்களே சொல்லுகிற சில முக்கிய பதிவுகளை என்னால் சமர்பிக்க முடியும் அப்பறம் அவங்களே கி பி 50 என்கிறார்கள். இங்க என்ன வெளிபடுகிறது என்று தெரியுமா? 50களில் கிடைகப்பட்டது என்று சொல்லுகிற அளவிற்கு அவர்களே ஒரு ஆவணத்தை உருவாக்கி இதுதான் அப்போதையது என்று சொல்லும் நிலை உண்டானது.

மற்றவர்கள் எல்லாரும் தோமா இரண்டாம் நூற்றாண்டினுடையது என்கின்றனர். தோமாவின் புத்தகம் கி பி 50, 60, 70, 90 என்று யாரும் ஒப்புகொள்ளாததற்கு காரணம் என்னவென்றால் அப்போதும் தோமாவினுடையது இல்லை, இதைதான் பெரும்பாலான வேத வல்லுனர்கள் கூறுகிறார்கள்.,

இது, மட்டும்தான் என்று சொல்லக்கூடிய கேனன் என்று எதுவுமே இருக்கவில்லை என்றுதான் சொல்கிறார்கள். இதைதான் நாம் எடுத்துகொள்ள வேண்டும் இதெல்லாம் வேண்டாதது என்று எதையுமே சொல்லவில்லை." இதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. சுவிசேஷகர்கள் ஏதாவது சொன்னால் அவர்கள் சங்கங்களில் இருந்து வெளியேற்றப்படுவார்கள், "எங்களுக்கு புத்தகம் கிடைத்துவிட்டது.இது நூறு வருடம் பழமையானது, இரண்டாம் நூற்றாண்டினுடையது. எங்களுக்கு பிடிச்சிருக்கு. அதனால இதையும் கேனனில் சேர்த்துக்கொள்ள போகிறோம்." அதுக்கு என்ன சொல்வாங்கன்னு தெரியுமா? நூறு வருடம் என்று சொன்னால் அது கிபி 150ன்னு உனக்கு தெரியாதா… இயேசுவை பற்றிய ஆதிகால ஆவணங்களின் தேதியை கடந்துவிட்டதே? இப்படிதான் தோமா இருந்தது.

இது கேனனில் இருந்து விளக்கப்பட காரணம் அதனுடைய தேதிதான். அங்க ஏதோ அரசியல் சூழ்ச்சி நடந்தது என்பதல்ல. இயேசுவை பிடிக்கவில்லை என்பதல்ல. இயேசுவை சுற்றி நடந்த பல நிகழ்வுகள் நம்மிடம் இருக்கிறது. எல்லாவற்றியும் எடுத்துகொள்ள முடியாது. அதிகாரபூர்வமான ஒன்று இருக்கிறது ஆனால் அதை அவருடைய அப்போஸ்தலர்கள் முன்வைக்கவில்லை என்று சோழ முடியாது – பவுல் பேதுரு யாக்கோபை குறை சொல்ல முடியாது. அப்போது அந்த நிருபம் இல்லாததால் அது சேர்க்கப்படவில்லை – நா தோமா சுவிசேஷத்தை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, கிறிஸ்தவரல்லாத ஒருவருக்கு எப்படி புதிய ஏற்பாட்டை உருவாக்கிய 27 புத்தகங்களும் இய்சுவை பற்றி கூறுகிற அனைத்தும் சத்தியம் என்றும், அவை இயேசுவின் வாழ்கையை பற்றி நேரடியாக பார்த்தவ சாட்சிகள் என்றும், அப்போஸ்தலர்கள் போன்றவர்கள், யாரன்று தெரியும் இவை அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட அதிகாரமுடைய புத்தகம் என்று எப்படி எடுத்து சொல்வீர்கள்? சரி, இந்த

புத்தகங்களில் உள்ள அனைத்தும் சாத்தியங்களும் உண்மை என்பதற்கு வலுவான வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** ஆதிகால கேணனை பற்றி இன்னொரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். புத்தகத்தின் இரண்டு பகுதிகளை பற்றி பார்த்துகொண்டு வருகிறோம்: சுவிசேஷங்கள் மற்றும் அப்போஸ்தலர்கள், அப்போஸ்தல புத்தகம் லூக்காவின் இரண்டாம் பாகமாக கருதப்படுகிறது. அதனால ஐந்து புத்தகம். பவுலின் நிருபங்கள் – விமர்சகர்கள் இதை ஐந்து, ஆறு, எட்டு என்கின்றனர். மொத்தம் பவுலின் நிருபங்கலாக பதிமூன்று இருக்கிறது. இந்த இரண்டு பகுதிகளும் முதல் நூற்றாண்டின் முடிவில் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. கிபி 325 நீசியா வரை யாரும் காத்திருக்கவில்லை. எனக்கு எப்படி தெரியும்? ஆதிகால கிறிஸ்தவ எழுத்தாரளர் மூன்று பேர்: கிளமென்ட், சுமார் கி பி 95; இக்நேஷியர் கி பி 107; பாலிகார்ப், சுமார் கிபி 110. ஒன்பது தலைப்பு நிருபங்கள். அதுல பவுல் இருக்காரு – சொல்லியிருக்காங்க, நூற்றிற்கும் குறைந்த அளவில் பவுலின் நிருபங்களில் சொல்லப்பட்டு இருப்பதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள். அவருடைய 12 13 நிருபங்களை குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவங்க விட்ட ஒன்றே ஒன்று பிலேமோன். ஏன்னு நீங்களே புரிந்துகொள்வீர்கள். ஒரே ஒரு அதிகாரம்தான்; இறையியலானது இல்லை. ஆனால் பவுல் இதை எழுதும்படி ஏவப்பட்டார். அவர் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டார். அவருடைய எழுத்துக்கள் எல்லாம் கிபி 100ல அங்கீகரிக்கப்பட்டு இருந்தது, இந்த மூன்று எழுத்தாளர்களும் பயன்படுத்தினார்கள். சுவிசேஷங்கள் – நூற்றிற்கும் மேற்பட்ட முறை சுவிசேஷத்தையும் அப்போஸ்தலரையும் பயன்படுத்தினார்கள். இந்த இரண்டு இலக்கிய பகுதிகளும், சுவிசேஷங்கள் மற்றும் அப்போஸ்தலர்கள், பவுலின் நிருபங்கள் பதிமூன்றில் பன்னிரண்டு அங்கீகரிக்கப்பட்டது – இவை அனைத்தும் புதிய ஏற்பாட்டின் தொகுப்பில் இடம் பெறுவதற்கு சரியானது என்று அங்கீகரிக்க பட்டது, இது கிபி 100ல சம்பவித்தது.

தோமாவின் காரியங்களை பார்க்கும்போது. அவை உள்ளளே இல்லாததற்கு காரணம்? அதற்கு எந்த எதிர்ப்பாளரும் இல்லை, சுவிசேஷங்கள் மற்றும் அப்போஸ்தலர்களுக்கு போட்டியாக வேறு ய்ந்த சுவிசேஷமும் முன்னிற்க முடியவில்லை. வேறு எந்த நிருபங்களும் பவுல் எழுதிய நிருபங்களை போன்ற அம்சங்களை கொண்டிருக்கவில்லை அதை பற்றி சொல்லப்பட்ட 200கும் மேற்பட்ட குறிப்புகள் நம்மிடம் இருக்கிறது... இதெல்லாம் முதல் நூற்றாண்டின் நாட்களில் நடந்தவை. நேயர்களே, இது ரொம்பவும், பழமைவாய்ந்த ஆதிகால ஆவணங்கள்.

இன்னொரு காரியத்தையும் சேர்த்திட நினைக்கிறேன். கிளமென்ட், கிபி 95; இக்னேஷியஸ், 107; பாலிகார்ப் கிபி 110 – இவங்க சுவிசேஷம் மற்றும் பவுலின் வார்த்தைகளை 200கும் மேற்பட்ட முறை பயன்படுத்தி இருக்காங்க. ஆனா உங்களுக்கு தெரியுமா? இவங்க தோமாவின் சுவிசேஷத்தை பற்றி சொன்னதே இல்ல.” ஏன்? அவங்க அதை கேனனைவிட்டு வெளியேற்றவேண்டும் என்று நினைத்தார்களா? இல்ல. அப்ப எந்த தோமாவும் அங்க இல்ல. அது பற்றி அவங்களுக்கு தெரியாது. அவங்க அதை

பார்க்கல. அதனால்தா புதிய ஏற்பாட்டின் அதிகாரபூர்வமான புத்தகங்களை பெற்றிருக்கிறோம், சுவிசேஷங்கள், அப்போஸ்தலர், பவுலின் நிருபங்கள்.

****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.